2016 ஜனவரி 23]

ரூ.54,000/- மட்டுமே. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பழைய திருத்தேர் ஏதும் தற்போது இல்லை. மேலும், தேரோடும் வகையில் அகன்ற வீதிகளும் இல்லை. இருப்பினும், எதிர்காலத்தில் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, தேரோடும் வாய்ப்புகளை உருவாக்கித் தரும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

பேருந்து வசதி

***52006 திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடிப் பேருந்து வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடியாகப் பேருந்து போகின்ற அளவுக்குப் போதுமான பயணிகள் இல்லாத காரணத்தினால், இது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகள் வரை, சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடியாகப் பேருந்து இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால், இப்போது பேருந்துகள் போதுமான அளவுக்கு இல்லை என்ற காரணத்தினால் அந்தப் பேருந்தை நிறுத்திவிட்டார்கள். எனவே, ஏற்கெனவே இயங்கி, இடையிலே நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்தை உடனடியாக இயக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கிய பேருந்தில் தினந்தோறும் 10—லிருந்து 12 பேர் மட்டும்தான் பயணம் செய்தார்கள். கடலூரிலிருந்து, சேத்தியாதோப்பு மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்து காஞ்சிபுரத்திற்கு அதிக பஸ்கள் இருக்கின்ற காரணத்தினால் நேரடியாகப் பேருந்தை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிதம்பரத்திலிருந்து இயக்கப்படுகிற பேருந்துகளில் சில நிறுத்தப்பட்டிருக்கின்றன. சில பேருந்துகளின் நடைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, கடலூர்—பிச்சாவரம் பேருந்து முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. சிதம்பரம்—டி.எஸ். பேட்டை, சிதம்பரம்—நெடுஞ்சேரி, சிதம்பரம்—புதுச்சத்திரம் ஆகிய நகரப் பேருந்துகள் எல்லாம் ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று நடைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகளைக் கேட்கின்றபோது, போதுமான அளவிற்கு*

பேருந்துகள் இல்லாத காரணத்தினால், நாங்கள் மாற்றி மாற்றி இயக்கி சமாளிக்க வேண்டியிருக்கிறது, அதனால் சில நடைகளைக் குறைக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிதம்பரம் பகுதிக்குக் கூடுதலான பேருந்துகளை ஒதுக்கி, இந்தப் பேருந்துகளின் நடைகளைக் குறைக்காமல், தொடர்ந்து இயக்குவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகின்றார்கள். கடந்த கால தி.மு.க. ஆட்சியைவிட இப்போது 1,480 புதிய வழித்தடங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 6,500 வழி நீட்டிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. யாரோ அதிகாரிகள் சொன்னார்கள் என்று சொல்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது குறிப்பிட்டு, ஏற்கெனவே இயங்கிய பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை கவனத்திற்கு எடுத்து வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதனை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், மஞ்சுகாண்டப்பள்ளி, தொட்டமஞ்சி, உளிபெண்டா, கெம்பஹரி போன்ற மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி இருந்தும் பேருந்துகள் இயக்கப்படவில்லை. நகரப் பேருந்துகளையோ அல்லது புறநகர்ப் பேருந்துகளையோ மலைப் பாதையில் இயக்குவதற்குச் சிரமமாக இருப்பதால், மலைக் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் சிற்றுந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 533 மலைப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிகளில் பயணிகளுடைய அடர்வு இருக்குமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். சிதம்பரம்—சேத்தியாதோப்பு வழியாக கண்ணங்குடி, குச்சிப்பாளையம், புளியங்குடி, சாக்காங்குடி வழி பேருந்து வசதி இல்லாத காரணத்தினால், அந்த வழியாக நகரப் பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதிகளுக்கு நகரப் பேருந்து வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். நகரப் பேருந்து போகின்ற அளவிற்கு வசதி இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

2016 ஜனவரி 23]

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதியில் பேருந்தே இயக்காத சில கிராமங்களுக்குப் பேருந்தை இயக்க வேண்டும் என்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தேன். அரூர், கிளாப்பாறை, ஈட்டியம்பட்டி, தீர்த்தமலை வழியாக எந்தப் பேருந்தும் இயக்கப்படவில்லை. இன்றைக்கும், 10 ஆண்டுக் காலமாக மக்களின் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாததால், மக்கள் பெரும் அதிருப்தியில் இருக்கின்றார்கள். அதேபோல, தருமபுரியிலிருந்து செம்மணஹள்ளி, கதிர்நாயக்கஹள்ளி வழியாக கம்பைநல்லூர் செல்லக்கூடிய ஒரே பேருந்து 36 வருடங்களாக ஓடிக் கொண்டிருக்கின்றது. மாற்றுப் பேருந்து என்பதே இல்லை. ஒரு பேருந்து சென்று மீண்டும் திரும்பி வரும்வரை வேறு பேருந்து வசதியில்லாமல் மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். இதுகுறித்து நான் ஏற்கெனவே இந்த அவையில் கோரிக்கையை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தருமபுரி மாவட்டத்திற்கு 20 புதிய பேருந்துகளை விட்டார்கள். அத்தனையும் புறநகர்ப் பேருந்துகளாக விடப்பட்டன. நகரப் பேருந்தாக விடாததனால் அதிகாரிகள் அதைப் புறக்கணித்திருக்கிறார்கள். ஆகவே, புறநகர்ப் பேருந்தை நகரப் பேருந்தாக மாற்றி, பேருந்து செல்லாத பகுதிகளுக்குப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் கிட்டத்தட்ட 1,480 புதிய வழித்தடங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னேன். ஆயிரம் மக்கள் தொகை உள்ள பகுதிகளுக்கு நிச்சயமாகப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதற்குக் குறைவாக மக்கள் தொகை இருக்கின்ற பகுதிகளுக்கு ஏற்கெனவே செல்கின்ற பேருந்துகளை நீட்டிப்பு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகாறும் பேருந்தே இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கு நகரப் பேருந்து வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள்.*

ஏற்கெனவே அந்தப் பகுதியிலே பேருந்துகள் இல்லை என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அப்படி இருக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

***64720—திரு. ஆர். மனோகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலுள்ள வார்டு எண்கள் 61 முதல் 65 வரையிலான பகுதிகளுக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட வார்டு எண்கள் 61 முதல் 65 வரையிலான பகுதிகளில் சீரான குடிநீர் வழங்கும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை 63 கோடியே 70 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்